**Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC 126/2026** | | |
| **PW/DW/CW** | : | **PW3** | | |
| **Name** | : ரமேஷ் | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : **ஒச்சாத்தேவர்** | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( All accused present)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **13.03.2026**

---

**முதல் விசாரணை:**

நான் தற்போது தாலுகா காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். சார்பு ஆய்வாளர் அருண்ராஜ் மற்று முதல்நிலை காவலர் ராம்குமார் ஆகியோர்களின் கையொப்பங்கள் எனக்கு தெரியும். நான் அவர்களுக்காக ஆவணங்களை பார்த்து, சாட்சி சொல்கிறேன். கடந்த 20.06.2023ஆம் தேதி காலை 16.00 மணிக்கு சார்பு ஆய்வாளர் அருண்ராஜ் தாலுகா காவல் நிலைய பொறுப்பிலிருந்தபோது புகார்தாரர் விஸ்வநாதன் கொடுத்த மனு ரசீது எண்ணை பார்வையிட்டு அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்193/2023 இதச பிரிவுகள் 294(b), 323, 353 ன்படி வழக்கு பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை **(அ.சா.ஆ. 2)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினமே 17.00 மணியளவில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, சாட்சிகள் கண்ணுசாமி, கவிதா ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அவைகள் முறையே **(அ.சா.ஆ. 3 மற்றும் 4)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் விஸ்வநாதன், அமைதி, மூக்கையா ஆகியோர்களைளயும், மகசர் சாட்சிகளையும் தனித்தனியே விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரிகள் அனைவரும் மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்ஜாமீன் பெற்று நீதிமன்றத்தில் சரணடைந்து பிணையில் சென்றுள்ளார்கள். **இந்த வழக்கின் சட்டப்பிரிவுகளை** 294(b), 323, 353, 355 இதச வின்படி சட்டப்பிரிவு மாற்றம் செய்யப்பட்டது. அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இறுதியாக

சம்பவம் உண்மையென தெரியவந்ததால், எதிரிகளின் மீது மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை பெற்று, சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றல் சரியல்ல. சம்பவ சென்று சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றும், பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவற்றை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் சரிவரபுலண்விசாரணை செய்யாமல், குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு, இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

S.d. Ramesh
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.G.Sathia Narayanan,B.A.B.L.,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.